## மேட்டூர் சார்பு நீதிமன்றம்

| O.S. No. 132/2014 | Date :09.11.2022. | DW1 |
|---|---|---|
| Name: கோசலை | W/o. **மாரியப்பன்** | Evidence Recorded Time: 11.15 A.M. to 12.05 P.M |

**வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:–**

வழக்கில் சொல்லப்பட்டுள்ள 8 முதல் 10 பிரதிவாதிகள் யார் என்றால் பொன்னுசாமி, சசிக்குமார், மற்றொருவர் பெயர் தெரியாது. அமராவதிக்கு பாத்தியப்பட்ட சுயராஜ்யதமாக பாத்தியப்பட்ட சொத்துக்களுக்கு உண்டான ஆவணங்களை ஒப்படைத்துள்ளேனா என்றால் கந்தாய ரசீது ஒப்படைத்துள்ளேன். எனது அம்மாவின் பெயரில் உள்ள பட்டாவோ, சிட்டாவோ, கிரைய பத்திரங்களோ தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை, அவை பிரதிவாதிகள் வசம் உள்ளது. வழக்கு சொத்துக்கள் இந்து கூட்டுக்குடும்ப சொத்துக்கள் என்றால் சரியல்ல. அமராவதிக்கு சொந்தமான சொத்து அமராவதி இறந்தபிறகு அந்த சொத்துக்கள் அவரது வாரிசுகளுக்கு செல்லும் என்றால் சரியல்ல. அமராவதி உயிருடன் இருக்கும்போது எழுதி வைத்த உயிலை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். அந்த உயில் என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 உயில் என்றால் சரிதான். நான் சொன்ன உயில் மோசடியாக தயார் செய்யப்பட்டது என்பதால்தான் அந்த உயிலை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. அந்த உயிலை பதிவு செய்யும்போது முதல் அயிட்ட சொத்தை பொறுத்து கதவு எண்.2/69 என்று பதிவு செய்துவிட்டு பின்னிட்டு 2/68 என்று திருத்தம் செய்து கொண்டேன் என்றால் சரியல்ல. அசல் உயில் பதிவு செய்யும்போது கூரை வீட்டின் கதவு எண்.1/51 என்றுதான் உள்ளது என்றும் அசல் உயிலில் அவ்வாறு காணவில்லை என்றால் சரியல்ல. உயிலில் இரண்டாவது அயிட்ட சொத்தில் திருத்தம் காணப்படுகிறது என்றால் காணப்படுகிறது. அந்த திருத்ததை வருவாய் ஆய்வாளர்தான் திருத்தம் செய்தார். நான் வாரிசு சான்றிதழ் வாங்க செல்லும்போது வருவாய் ஆய்வாளர் நாங்கள் சொல்லி திருத்தம் செய்தாரா என்றால் இல்லை அவரே திருத்தம் செய்தார். என்னுடைய பதிலுரையில் நான் உயிலை கொடுத்தேன் அதில் வருவாய் ஆய்வாளர் திருத்தம் செய்த சங்கதியை சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. நான் மேட்டூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த அசல் வழக்குரையில் உயிலில் திருத்தம் செய்த விவரத்தை சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்த அசல் வழக்குரையிலும் ஆர்.ஐ திருத்தம் செய்த சங்கதியை கூறவில்லை என்றால் சரிதான். 2–ம் அயிட்ட சொத்து பதிவு செய்த பொழுது பதிவு செய்யப்பட்ட உயிலில் பட்டா எண்.31, பழைய சர்வே எண்.452/16 இதற்கு புதிய சர்வே எண்.544/10 பு.ஹெக்.0.56.0 க்கு பு.ஏ.1.38 செண்ட் என அசல் உயிலில் பதிவு செய்யப்பட்டபோது எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். பின்னிட்டு நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த உயிலில் பட்டா எண்.911, பழைய சர்வே எண்.452 இதற்கு புதிய சர்வே எண்.546/6 பு.ஹெக்.40.0.0 க்கு பு.ஏ.40.0 என்று சொல்லி நான் தாக்கல் செய்த உயிலில் கண்டுள்ளது என்றால் சரிதான். பதிவு செய்யப்பட்ட உயிலில் இதன் மத்தியில் மேற்கண்ட பு.ஏ.1.35 செண்ட் நிலம் பூராவும் என பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். பின்னிட்டு இதன் மத்தியில் மேற்கண்ட பு.ஏ.40.0 என திருத்தம் செய்யப்பட்டது என்றால் சரிதான். அந்த திருத்ததை அப்பு செய்தார். நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட உயிலில்

இதன் பழைய சர்வே எண்.452/7 ஆகும் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 நான் தாக்கல் செய்த உயில் ஆவணத்தில் சர்வே எண்.452/7 என்று சொல்லவில்லை என்றால் சரிதான். எனது அம்மாவிற்கு விருப்பம் இல்லாமல், அவருக்கு வயதாகி கண் பார்வை இழந்தபோது அவரை வலுக்கட்டாயமாக அழைத்து சென்று பதிவு செய்ததால் சர்வே எண், விஸ்தீரணம் ஆகியவை தவறாக பதிவு செய்துவிட்டு பின்பு அவற்றை திருத்தம் செய்து பொய்யாக வழக்கு தாக்கல் செய்து வழக்காடி வருகிறேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த உயிலே மோசடியாக தயாரிக்கப்பட்டதால் தான் அதன் உண்மை தன்மை நீதிமன்றத்திற்கு தெரியவந்துவிடும் என்பதால் அதன் அசல் மற்றும் சான்றிட்ட நகலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. பதிவு செய்த உயிலில் திருத்தம் செய்து விட்டு இந்த வாதிகளுக்கு கூட்டாக பாத்தியப்பட்ட நிலத்தை 8 முதல் 10 பிரதிவாதிகளுக்கு கிரையம் செய்து கொடுத்துள்ளேன் என்றால் தவறாகும். வாதிகளுக்குண்டான சொத்தில் உள்ள உரிமையை மறுப்பதற்காக நானும் 8 முதல் 10 பிரதிவாதிகளும் கூட்டாக சதி செய்து கிரைய பத்திரம் ஏற்படுத்தியுள்ளோம் என்றால் தவறாகும். கிரைய ஆவணத்தில் சரவணன், லட்சுமி, ஜானகி ஆகிய மூவரும் எனது பிள்ளைகள் அவர்களுக்கும் சேர்ந்துதான் கிரையம் செய்து கொடுத்தேன் என்றால் சரிதான், அவர்களுக்கும் சேர்த்துதான் இந்த வழக்கை நடத்தி வருகிறேன் என்றால் சரிதான். உயிலில் 2 வது அயிட்டமாக கட்டப்பட்ட சொத்தைதான் கிரையம் எழுதிக்கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். கிரைய ஆவணத்தில் சிங்கிரிப்பட்டி கிராமம் புதிய சர்வே எண்.546/6, பு.ெஹக்.0.40.0 க்கு தீர்வை ரூ.0.50 உள்ள இதற்கு பு.ஏ.0.99 செண்ட் என்றால் சரிதான். பதிவு செய்யப்பட்ட உயிலில் ஒரு ஏக்கர் 38 செண்ட் என்று எழுதியுள்ளது என்றால் சரிதான். நீதிமன்றத்தில் தாக்கல் செய்த உயிலில் 0.40 ஹெக்டேர் என்று காணப்படுகிறது என்றால் சரிதான். எனது அம்மாவின் இறப்பு சான்றிதழ் மற்றும் வாரிசுகள் யார் என்று காட்டப்படுவதற்கு வாரிசு சான்றிதழையோ தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அசல் வழக்கு எண்.219/2013 என்ற முதன் முதலில் நான் தான் எங்கள் குடும்பத்திலிருந்து தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். மேற்படி அசல் வழக்கு எண்.219/2013 வழக்கில் உயிலில் கண்ட முதல் அயிட்ட சொத்து பொறுத்தான் வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். வழக்கின் வாதிகளுக்கு மேற்சொன்ன அசல் வழக்கு 219/2013 வழக்கில் அழைப்பாணை கிடைக்கப்பெற்ற பிறகுதான் உயில் இருப்பது பற்றி தெரியவந்தது என்றால் சரிதான். தற்போது சாட்சி தான் வாரிசு சான்று வாங்கும்போதுதான் தெரியும் என்று கூறுகிறார். வாரிசு சான்றிதழ் எப்போது வாங்கினேன் என்றால் 2002–ல் வாங்கினேன். அந்த வாரிசு சான்றிதழை என் வழக்கறிஞரிடம் கொடுத்துவிட்டேன். நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது சகோதரர் வாதி வகையாறாக்களுடன் எப்போது இருந்து பேச்சு வார்த்தை இல்லை என்றால் 1980–ல் இருந்தே பேச்சுவார்த்தை இல்லை. எங்கள் வீட்டில் என்ன நல்லது கெட்டது நடந்தாலும் அவர்கள் வருவதில்லை, அதுபோல அவர்கள் வீட்டில் என்ன நல்லது கெட்டது நடந்தாலும் நானும் செல்வதில்லை. இந்த வழக்கில் A அயிட்ட சொத்து என்ன காட்டியுள்ளேன் என்றால் வீடு காட்டியுள்ளேன். அந்த வீட்டில் நான் குடியிருந்து வருகிறேன் என்று சொல்லி வீட்டுவரி ரசீது, மின் கட்டணம் செலுத்தி வருகிறேன் என்று சொல்லியுள்ளேன். அதற்குண்டான ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேனா என்றால் அவற்றை என்

வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன். அந்த உயில் பதிவு செய்யப்பட்ட பின்னர் அதில் உள்ள சொத்துக்களை விற்க முடியாத காரணத்தினால்தான் உயிலை திருத்தி மோசடியாக கிரைய பத்திரம் ஏற்படுத்தியுள்ளேன் என்றால் சரியல்ல. உயிலில் கண்ட திருத்தங்கள் எல்லாம் அப்பு வகையறாக்கள் திருத்தம் செய்துகொண்டார். பி அயிட்ட சொத்தை வாங்கியவர்களிடம் நான் அசல் உயிலை கொடுத்துவிட்டேன், அவர்கள் அப்புவிடம் கொடுத்து அசல் உயிலை திருத்தம் செய்து கொண்டார்கள். அவ்வாறு திருத்தம் செய்த கொண்ட விவரத்தை நிலம் வாங்கியவர்கள் தான் என்னிடம் சொன்னார்கள். நான் சொல்வது தவறு என்றாலும் நானும், 8 முதல் 10 பிரதிவாதிகளும் சேர்ந்துதான் உயிலை திருத்தம் செய்து கொண்டோம் என்றால் சரியல்ல. பி அயிட்ட சொத்தை பொறுத்து பட்டா மாறுதல் உத்தரவு என்னிடம் உள்ளது. பட்டா மாறுதல் உத்தரவு, பட்டா ஆகியவற்றை என் வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன். அசல் வழக்கு எண்.240/2013 வழக்கில் நான் என்ன பரிகாரம் கேட்டுள்ளேன் என்றால் பாகம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். நான் வெளியூரில் எவ்வளவு நாட்கள் வேலைக்கு சென்றேன் என்றால் 1992 வெளியூர் சென்று 1993–ல் வந்துவிட்டேன். நான் வேலை சம்மந்தமாக ஒரே இடத்தில் நிலையாக இருக்கமாட்டேன் என்றால் சரியல்ல. என் அம்மா இறக்கும் வரை அப்புதான் அவரை பார்த்து வந்தார் என்றாலும் நான் அம்மாவை எந்த காலத்திலும் கவனிக்கவில்லை என்றால் சரியல்ல. என்னுடைய பிரமாண பத்திரத்தில் உயில் ஆவணத்தை உறுதி செய்து கடந்த 19.05.2003 தேதியன்று தாவா சொத்துக்களை பொறுத்து மேட்டூர் மண்டல துணை வட்டாட்சியர் பட்டா மாறுதல் உத்தரவு வழங்கியதாக குறிப்பிட்டுள்ளேன். அதனை தாக்கல் செய்துள்ளேனா என்றால் என் வழக்கறிஞரிடம் கொடுத்துவிட்டேன். பி அயிட்ட சொத்து விவசாய நிலம் என்றால் சரிதான். அதில் கட்டுமானம் எதுவும் இல்லை என்றால் சரிதான். நான் வீட்டில் குடியிருந்து வருவதாக தவறாக சொல்லியுள்ளேன் என்றாலும் வீடு பூட்டப்பட்டு குடியிருக்க இயலாத நிலையில் இருக்கிறது என்றால் சரியல்ல. நான் என்னுடைய பிரமாண பத்திரத்தில் கடன் கொடுத்துள்ளதாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். அதற்கான ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆவணம் தருவதாக சொல்லி தரவில்லை. நானே கூலி வேலை செய்து அன்றாட ஜீவனத்திற்கு சிரமப்பட்டுள்ளேன் என்றாலும் நான் யாருக்கும் கடன் கொடுக்க இயலாத நிலையில் உள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கில் சொல்லியுள்ள வழக்கு சொத்துக்கள் மற்றும் சிங்கரிப்பட்டி கிராமம் சர்வே எண்.544/10–ல் 0.03.5 ஹெக்டேர் அமராவதிக்கும் தாண்டவனுக்கும் பாத்தியப்பட்டது என்றால் சரிதான். அம்மா உயிருடன் இருக்கும்போதே சர்வே எண்.544/10 நிலத்தை விற்றுவிட்டார் என்றால் என் அம்மாவிற்கு தெரியாமல் விற்றுவிட்டார்கள். என் அம்மாவை மிரட்டி கையெழுத்து போட சொன்னால் போட்டுவிடுவார். அப்படிதான் நானும் மிரட்டி உயிலில் கையெழுத்து வாங்கினேன் என்றால் சரியல்ல. என் அம்மா எனக்கு எழுதி கொடுத்த உயில் சுய விருப்பத்தின் பேரில் எழுதிக்கொடுக்கவில்லை என்றாலும் என்னுடைய வலுக்கட்டாயத்தின் பேரில்தான் உயில் எழுதி வாங்கப்பட்டது என்றாலும் சரியல்ல. பதிவு செய்யப்பட்ட உயிலில் கண்டுள்ள சொத்தும் அமாரவதிக்கு பாத்தியப்பட்ட சொத்தும் வெவ்வேறு சர்வே எண்கள் என்றும் ஆகையால் அந்த உயிலின் அடிப்படையில் நான் உரிமை கொண்டாட முடியாது என்றால் சரியல்ல. ஏ, பி அயிட்ட சொத்துக்களில் காணப்படும் இரண்டு சர்வே எண்களும் அமராவதிக்கு சொந்தமான சொத்துக்கள் என்பதை பொறுத்து எனக்கு எந்தவிதமான சந்தேகமும் கிடையாது. வழக்கில்

குறிப்பிட்டுள்ள பி அயிட்ட சொத்து அமராவதி பாத்தியப்பட்டு அமராவதி இறந்தபின்பு வாதிகள் மற்றும் 1 முதல் 4 பிரதிவாதிகளுக்கு கூட்டாக பாத்தியப்பட்ட சொத்தாகிறது என்றாலும் நானும் என் வாரிசுகளும் சேர்ந்து 8 முதல் 10 பிரதிவாதிகளுக்கு செய்து கொடுத்த கிரையம் செல்லாத கிரையம் என்றால் சரியல்ல. வாதிகளுக்கு தாவா சொத்தில் 16–ல் 9 பாகம் உள்ளது என்றாலும் அதை பிரித்துக்கொடுக்க கடமைப்பட்டவர்கள் என்றால் சரியல்ல. உயில் நான் சொல்வது போல உண்மையான உயில் என்று வைத்துகொண்டாலும் கூட பதிவு செய்யப்பட்டதை நான் திருத்தியதால் செல்லாத உயில் என்று ஆகிவிட்டதால் எனவே அந்த உயிலை செல்லாத உயில் என்று அறிவிக்க பிரதிவாதிகள் விளம்புகை பரிகாரம் கோருகிறார்கள் என்றால் அது தவறாகும். 13.07.2011–ல் நான் 4 முதல் 7 வரை பிரதிவாதிகள் 8 முதல் 10 பிரதிவாதிகளுக்கு ஏற்படுத்திக்கொடுத்த கிரைய ஆவணம் செல்லாது என்று விளம்புகை செய்யவேண்டும் என்று வாதிகள் கோருவது தவறாகும். வாதிகள் தாக்கல் செய்த வழக்கு செலவு தொகையுடன் வாதிகளுக்கு ஆதவராக தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை – இல்லை.</u>**

ஒம்/–DW1,

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியெென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/–S.முத்துராமன்,
சார்பு நீதிபதி, மேட்டூர்